குறிப்பிட்டார்கள். அந்தச் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. எவ்வளவு பேரை நியமிக்க முடியும் என்பதுதான் அந்தப் பரிசீலனையினுடைய முடிவாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : தமிழை மேம்படுத்த வேண்டும், கௌரவிக்க வேண்டும் என்று தமிழுக்காக இந்த அரசு நல்லமுறையிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியிருக்கிறது. அதற்காக இவ்வளவு தொகை செலவழிக்கும் நல்லெண்ணத்தில் நாம் இருக்கும்போது, 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கையாக அறிவித்ததை ஏற்று, பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லாமல், பொருளாதாரச் செலவைப் பார்க்காமல், 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பரிசீலனையிலே இருக்கிறது என்று சொல்லாமல், பொருளாதாரச் செலவைப் பார்க்காமல், இதிலே ஈடுபட வேண்டும், ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். சம்பளம், ஊதியம் கொடுக்க வேண்டுமென்று வருகிறபோது; பொருளாதாரச் செலவைப் பார்க்காமல் எப்படி முடிவெடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : வருவாய் உள்ள கோயில்களாகப் பார்த்து தமிழாசிரியர்களை நியமிப்பதைக் காட்டிலும், வருவாய் இல்லாத கோயில்களுக்கு தமிழாசிரியர்களை நியமிப்பதன் மூலம் ஸ்தல புராணங்களையெல்லாம் நல்ல முறையில் சொல்லிக்கொடுத்து, அதன் மூலம் அந்தக் கோயில்களுக்கு வருவாய் அதிகமாக வர வழி ஏற்படும் என்பதால், வருவாய் குறைந்த கோயில்களுக்கு தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : வருவாய் இல்லாத கோயில்களுக்கு தமிழாசிரியர்களை நியமித்தால், அவர்களுக்கு உள்ள ஊதியத்தை எங்கேயிருந்து எடுத்துக் கொடுப்பது என்பதுதான் இப்போது உள்ள பிரச்சினை.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கு கல்விக்கடன்.

*** 105 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் மற்றும் பல் தொழில்நுட்பப் பயிலகங்களில் படிக்கும் அரசு ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக கடன் வழங்க வகை செய்யும் அரசாணை எண் 1954, உள்ளாட்சித்துறை, நாள் 13—12—1979

மற்றும் அரசாணை எண். 821, நிதி (ஊதியம்) நாள் 13—6—1979 ஆகியவை களில், நகராட்சி, டவுன்ஷிப், மாநகராட்சி என்பவை மட்டுமே குறிப்பிடப் பட்டிருப்பதால், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கு அக்கடன் சலுகை கிடைக்கப் பெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கும் அச்சலுகை பொருந்தும் வகையில் ஆணை பிறப்பிக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (இ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் (ஆசிரியர்கள் உட்பட) பிள்ளைகள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் படிப்பதற்கு கல்விச் செலவுக்கு கடன் வழங்க 28—6—1980 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண் 995-ல் உத்திரவு வெளியாகியுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலிலே கூட 'ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்' என்று குறிப்பிட்டிருக்கி றார்கள். ஆசிரியர்களும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் என்றாலும், ஆசிரியர்களுக்கென்று தனியான முறையிலே, அவர்களுக்கும் இது பொருந் தும் என்ற முறையிலே, ஆணை இருந்தால்தான், அவர்களுக்கு இந்தச் சலுகை அமுல்படுத்தப்படும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே, அவர் களுக்கும் இது பொருந்தும் என்ற வகையிலே, ஆணை பிறப்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த ஆணை ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

Family Planning Operations

*106 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 3134, Health and Family Welfare Department, dated 14th December 1976, Government Servants who have undergone the Sterilization/ Tubectomy operations are eligible for incentive increment, if they have got only three children; and

(*b*) if so, the reason for not extending this privilege to teachers under Panchayat Unions who have undergone such an operation in 1978?